www.Padasalai.Net

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின்
செயல்முறைகள், சென்னை-06.
ந.க.எண்.1068093 /எஃப்-2/2024 நாள்.05.12.2024.

.........

பொருள்: மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் உள்ளடக்கிய கல்வி இ-பயிற்சியினை 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு Baseline & Endline Assessment மூலமாக மதிப்பீடு செய்து அதனை LMS தளம் வாயிலாக பதிவேற்றம் மேற்கொண்டும் இணையவழியில் பயிற்சியும் அளித்தல் - மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்துதல் -தொடர்பாக.

பார்வை: தமிழ்நாடு மாநிலத் திட்ட இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் கடித ந.க.எண். 170/ ஆ3/1E/ஒபக/2024 நாள்03.12.2024.

......

பார்வையில் காணும் வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகளின்படி, 2024 - 2025 கல்வியாண்டில் சிறப்பு தேவையுடைய குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வியின் மூலம் முறையான கல்வியை மேம்படுத்தும் நோக்கில் கட்டகம் உருவாக்கப்பட்டு பார்வையில் காண் கடிதம் மூலம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டும், மதிப்பீடு செய்தும் (Assessment) உள்ளடக்கிய கல்வி பற்றி ஆசிரியர்கள் அறிந்திடும் வகையில் LMS தளத்தின் மூலம் பதிவேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி கட்டகத்தினை இணைய வழி வாயிலாக EMIS தளத்தின் வழியே 14.12.2024 அன்று முதல் காணொலி மூலம் கீழ்க்காணும் வகையில் 7 கட்டகங்களாக மாவட்டங்களில் அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1. மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் - 2016
2. 21 வகையான குறைபாடுகள் பற்றிய ஒரு முன்னோட்டம்.
3. உடல் சார்ந்த குறைபாடுகள்.
4. உணர்திறன் குறைபாடுகள்.
5. அறிவுசார் குறைபாடுகள்.
6. அ. இரத்தம் சார்ந்த குறைபாடுகள்.
   ஆ. நாள் பட்ட நரம்பியல் குறைபாடுகள்.
7. பன்முக குறைபாடுகள் மற்றும் பிற.

மேற்காண் 7 கட்டகங்கள் கீழ்க்காணும் அமைப்பில் அமைந்துள்ளன.

1. முன் திறனறி மதிப்பீடு (Baseline Assessment)

www.Padasalai.Net

2. பயிற்சிக்காணொலி
3. பயிற்சிக்கையேடு
4. பின் திறனறி மதிப்பீடு (Endline Assessment)

எனவே, மாநிலம் முழுவதும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை கையாளும் அனைத்து வகை பள்ளி ஆசிரியர்களுக்கு LMS வழியாக அளிக்கப்படும் பயிற்சியில் தவறாமல் பங்கேற்கவும், உரிய நாள்களில் தக்க அறிவுரையினை வழங்கிட நடவடிக்கையினை மேற்கொள்வதற்கும், அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், இணையவழி பயிற்சியில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பணிபுரியும் ஏதேனும் ஒரு விரிவுரையாளர் பங்குகொள்வதற்கு ஏதுவாக நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் தங்களது மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலருடன் இணைந்து செயல்படுமாறும், அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒ. ஒம் 5.12.2
இயக்குநருக்காக
ஒ/ 5/12/24

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. முதல்வர்கள், அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.

நகல்

1. சென்னை-06, பள்ளிக்கல்வித் துறை, அரசு செயலர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சென்னை-06, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநிலத்திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. சென்னை-06, பள்ளிக்கல்வி இயக்ககம், இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
4. சென்னை.06, தொடக்கக்கல்வி இயக்ககம், இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.

www.Padasalai.Net

கற்போர் மேலாண்மைத் திட்டம் (LMS) - இணையவழிப் பயிற்சி

உள்நுழைதலும் பயிற்சியை முடித்தலும் சார்ந்த குறிப்புகள்

1. LMS தளத்தினுள் நுழைதல்

- LMS தளத்தினுள் நுழைய https://lms.tnsed.com/login/ என்னும் இணைப்பைப் பயன்படுத்துக.
- உங்களுடைய EMIS பயனர் அடையாள எண்ணையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தி உள்நுழைக.

2. பயிற்சியின் கட்டமைப்பு

   - பயிற்சியானது, ஏழு கட்டகங்களைக் கொண்டது.
   - ஒவ்வொரு கட்டகத்திலும் முன்-திறனறி மதிப்பீடு, பயிற்சிக்கான பாடப்பொருள், பின்-திறனறி மதிப்பீடு ஆகியவை உள்ளன.
   - ஏழு கட்டகங்களின் இறுதியிலும் இடம்பெற்றுள்ள பின்னூட்டத்திற்கான வினாக்களுக்கு விடையளிக்கவேண்டும்.

3. கட்டகத்தின் படிநிலை வளர்ச்சி

   - பயிற்சியின் ஒவ்வொரு பகுதியும் அதற்கு முந்தைய பகுதியை நிறைவு செய்த பின்னரே, தொடர்ந்து பயிற்சியை மேற்கொள்ளும் வகையில் கட்டகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

4. கட்டகத்தை நிறைவுசெய்வதற்கான அளவுகோல்கள்

   - கட்டகங்களில் இடம்பெற்றுள்ள அனைத்துப் பகுதிகள், வினாடிவினாக்கள், பின்னூட்டப் படிவங்கள் ஆகியவற்றை முழுமையாக முடித்தபின்னரே பயிற்சியை நிறைவு செய்ததாகக் கருதப்படும்.

5. சான்றிதழ்

   - பயிற்சியை நிறைவு செய்வதற்கு எடுத்துக்கொண்ட காலஅளவையும் கணக்கில்கொண்டு, பயிற்சி நிறைவு செய்ததற்கான சான்றிதழ் உருவாகும். அதனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.